# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நள்ளிரவு நேரத்திலும் ஓடோடிச் சென்று - கவரைப்பேட்டை ரயில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி - நிவாரண நடவடிக்கைகள் மேற்கொண்ட காட்சி!











திருவள்ளூர் மாவட்டம் கவரப்பேட்டை அருகே பாக்மதி விரைவு ரயில் சரக்கு ரயிலுடன் மோதிய விபத்தையடுத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் முழு வீச்சில் மீட்புப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ரயில் விபத்தில் காயமுற்று, சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வரும் பயணிகளை நள்ளிரவு நேரத்திலும் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓடோடிச் சென்று நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். காயமுற்றுள்ள பயணிகளுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு வரும் நிலையில், அதன் விவரம் குறித்து, மருத்துவமனை டீனிடம் கேட்டறிந்தார். சிகிச்சையில் உள்ளோருக்குத் தேவையான உணவு உள்ளிட்ட வசதிகளையும் உடனுக்குடன் அளிக்க ஆலோசனைகள் வழங்கினார். மேலும், விபத்து நடந்த இடத்தில் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள பயணிகள் தங்க வைக்கப்பட்டுள்ள விவரம், அவர்கள் சொந்த ஊருக்குத் திரும்புவதற்கான மாற்று ஏற்பாடு, உணவு மற்றும் குடிநீர் உள்ளிட்ட வசதிகள் போன்றவை குறித்து, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரிடம் கேட்டறிந்தார். கலாநிதி வீராசாமி எம்.பி., துணை முதல்வரின் செயலாளர் பிரதீப் யாதவ் ஆகியோர் உடன் உள்ளார்கள்.

### திருவள்ளூர் மாவட்டம் – கவரைப் பேட்டையில் ரயில் விபத்து:

## மீட்புப் பணிகளை தொடர்ந்து கண்காணித்து வருகிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை,அக்.13- திருவள்ளூர் மாவட்டம் - கவரைப்பேட்டையில் இரயில் விபத்து நடந்ததையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவில், “மீட்புப் பணிகளைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறேன்’’ என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டையில் இரயில் விபத்து நடந்ததை அறிந்து அதிர்ச்சியடைந்தேன்.

தகவல் கிடைக்கப் பெற்றவுடன், அமைச்சர் சா. மு. நாசர் அவர்களையும் மற்றும் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளையும் விபத்து நடந்த இடத்திற்குச் செல்ல உத்தரவிட்டேன்.

மீட்பு மற்றும் உதவிப் பணிகளில் அரசு துரிதமாகச் செயல்பட்டு வருகிறது. இவ்விபத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படு கிறார்கள். மற்ற பயணிகளுக்குத் தேவையான உணவு, அவர்கள் ஊர் திரும்பு வதற்கான பயண வசதிகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்வதற்கெனத்தனியே ஒரு குழு இயங்கிக் கொண்டிருக்கிறது.

விபத்துக்குள்ளான இரயில் பெட்டிகளை அகற்றும் பணியில் தீயணைப்புத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

மீட்புப் பணிகளைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஊராட்சி ஒன்றியம், திருமயம் அரசு மேல்நிலைப்பள்ளியில், மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### அனந்தபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில்

## 246 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி அக் 13- விழுப்புரம் மாவட்டம் அனந்தபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பதினோராம் வகுப்பு படிக்கும் 246 மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன் தலைமை தாங்கினார்.

பள்ளி தலைமை ஆசிரியர் ஆனந்தன் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பதினோராம் வகுப்பு படிக்கும் 246 மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத், அனந்தபுரம் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் அமுதா கல்யாண் குமார், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் தனலட்சுமி அறிவழகன், தமிழரசி கன்னியப்பன், சுமதி கிருஷ்ணமூர்த்தி, ஜேம்ஸ்,செல்வி ஞானசேகர், அன்வர்பாஷா, அனந்தபுரம் நகர அவை தலைவர் டாக்டர் கல்யாண் குமார், பொருளாளர் பாபு ஐயர், துணை செயலாளர் ராஜேந்திரன், நிர்வாகிகள் தக்ஷிணாமூர்த்தி, அனையேரி ரவி,அரசு ஒப்பந்ததாரர் சரவணன், செல்வமணி, பிரசன்னா, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பட்டதாரி ஆசிரியர் முருகன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். உதவி தலைமை ஆசிரியர் மகாதேவன் நன்றி கூறினார்.


## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வரும் செய்தி!

